# பரீட்சகரின் அறிக்கை

# AA2 பரீட்சை – 2018 சனவரி

# (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறிகளும்

## பகுதி A

### வினா இல. 01

இவ்வினா 20 புள்ளிகளுக்கான 10 OTQs இனைக் கொண்டிருந்தது.

இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்க முயற்சித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

வினா இலக்கங்கள் **1.4, 1.6, 1.9** ஆகியவற்றிற்கு குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் வினா இலக்கங்களான **1.4** மற்றும் **1.6** ஆகியவற்றில் காணப்பட்ட **அல்லாதது** மற்றும் **அமையாதது** என்னும் பதங்களை கவனிக்காததன் காரணமாக அவ்வினாக்களுக்குத் தவறான விடைகளை வழங்கியிருந்தனர்.

வினா இலக்கம் **1.9**, மிகவும் இலகுவானதும் நேரடியானதுமான வினாவாக இருந்தபோதிலும் அதில் கேட்கப்பட்ட பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழுவின் இரண்டு தொழிற்பாடுகளை எழுதுவதற்குப் பல பரீட்சார்த்திகள் தவறியிருந்தனர்.

**பகுதி A** ஆனது சித்திப் புள்ளிக்கு மிகவும் கிட்டிய அளவான புள்ளிகளைக் கொண்டிருப்பதால் இப்பகுதிக்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பரீட்சார்த்திகள் பாடத்திட்டத்தின் சகல பகுதிகளிலும் அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## பகுதி B

### வினா இல. 02

இந்த வினா பொருட்கள் விற்பனைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் இது ஓர் விபரிப்பு மூலமான பொருட்களின் விற்பனைக்கானதொரு ஒப்பந்தம் என்பதையும் தரப்பட்ட விவரணத்தில் விபரிக்கப்பட்ட விடயங்களுடன் பொருட்கள் இயைபுடையதாக இருக்க வேண்டும் என்கின்ற ஓர் உட்கிடை நிபந்தனை இருக்கிறது என்பதையும் பரீட்சார்த்திகள் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. சில பரீட்சார்த்திகள், கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்காக **சிறிபால**விடமிருந்து பணத்தினை மீளப்பெறுவதற்கு **துமிந்த**வுக்கு உரித்துள்ளதா என்பது பற்றி எவ்வித தெளிவுபடுத்தலுமின்றி விடையளித்திருந்தனர். கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விவரணத்தில் தரப்பட்டிருந்த விடயங்கள் மற்றும் சரியான கோட்பாட்டு அடிப்படை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விடையினை பகுத்தறியாது கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்காக **சிறிபால**விடமிருந்து பணத்தினை மீளப்பெறுவதற்கு **துமிந்த**வுக்கு உரித்துள்ளது அல்லது இல்லை என வெறுமனே எழுதியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை நியாயமானளவு திருப்தியானது.**

## வினா இல. 03

இவ்வினா நடைமுறை வாழ்வில் இடம்பெறக்கூடிய நிகழ்வு ஒன்றில் மாற்றத்தகு சாதனங்கள் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருக்கிறது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் திருப்திகரமான விடைகளையும் வழங்கியிருந்தனர். பல பரீட்சார்த்திகள் சாதாரண நிலைமை ஒன்றில் காசோலை விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு மாத்திரமே அக்காசோலை செல்லுபடியாக இருக்கும் என்பதை விபரிக்காது காசோலைகளின் குறுக்குக் கோடிடல் பற்றி வெறுமனே விபரித்திருந்தனர். அத்தகைய பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிகள் பற்றிக் கவனம் செலுத்தியிருக்கவில்லை. தரப்பட்ட விவரணத்தில் காசோலை விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாத காலம் கழிந்துவிட்டது என்பதை விளங்கிக்கொள்ளாது **பெரேரா**விடமிருந்து பெற்ற காசோலையை மாற்றுவதற்கு (காசாக்குவதற்கு) **சுனிலுக்கு** உரித்துள்ளது அல்லது இல்லை என விபரித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை நியாயமானளவு திருப்தியானது.**

## வினா இல. 04

இவ்வினா பரீட்சார்த்திகளின் காப்புறுதிச் சட்டம் தொடர்பான அறிவைப் பரீட்சித்தது. காப்புறுதிச் சட்டத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்களைக் கொண்டு, விடையை நியாயப்படுத்துவதற்கான சரியான மெய்மைகளை வழங்காது, **அலைஸ்** இன் சகோதரியினது ஆயுள் காப்புறுத்திக்காக **அலைஸ்** இனால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை **Safe Line காப்புறுதிக் கம்பனி** ஏற்றுக்கொள்ள முடியும் அல்லது முடியாது என்பதை மாத்திரம் சில பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. பல பரீட்சார்த்திகள் தமது விடைகளை விபரிக்கும்போது காப்புறுதியின் காப்புறுத்தத்தக்க நாட்டத்துடன் இந்த விடயத்தினைத் தொடர்புபடுத்தாது காப்புறுதியின் சம்பந்தமற்ற எண்ணக்கருக்களைப் பிரயோகித்திருந்தனர். ஒருவர் தொடர்பாக அவரின் சகோதரர் ஒருவர் ஆயுள் காப்புறுதியின் காப்புறுத்தத்தக்க நாட்டத்தை கொண்டிருக்க முடியாது என்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். விடையளிப்பதற்கு முன்பு வினாவைச் சரியாக விளங்கிக்கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை நன்று.**

## வினா இல. 05

இவ்வினா சர்வதேச வர்த்தகம் தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவினைப் பரீட்சித்திருந்தது. இவ்வினாவில் கப்பலேற்று வார்நாமம் ஒன்றின் தொழிற்பாடுகளை விபரிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தபோதிலும் குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் கப்பலேற்று வார்நாமத்தின் தொழிற்பாடுகளை விபரிக்காது கப்பலேற்று வார்நாமம் பற்றி விபரித்திருந்தனர். கப்பலேற்று வார்நாமம் என்பது பொருட்களுக்காக கப்பல் உரிமையாளர் ஒருவரால் வழங்கப்படும் பற்றுச்சீட்டு என்பதுடன் அது, குறித்த இலக்கு ஒன்றிற்காக அந்தப் பொருட்கள் கப்பல் ஏற்றப்பட்டுள்ளன என்பதை ஒப்புக்கொள்கின்ற ஓர் ஆவணமும் ஆகும். இது கொண்டுசெல்வதற்கான ஒப்பந்தம் ஒன்றின் சான்று என்பதுடன் ஓர் உரித்தாவணமும் ஆகும். இது காப்புறுதி நட்டஈட்டினை உரிமைக்கோரிக்கை செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகம் தொடர்பில் ஆழமான அறிவினை விருத்திசெய்துகொள்ளல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 06

இவ்வினா 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச்சொத்துக்கள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இது 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ், ஏற்பிசைவு செய்யப்பட்ட புலமைச் சொத்தின் இரண்டு (02) வகைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் இவ்விடயம் தொடர்பில் எவ்வித விளக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் முற்றாகச் சம்பந்தமற்றதும் பிழையானதுமான விடைகளை வழங்கியிருந்தனர். பதிப்புரிமை, குறிகள், ஆக்கவுரிமை, வர்த்தக நாமங்கள், தொழிற்றுறை வடிவமைப்பு மற்றும் பூகோளரீதியான குறிப்புகள் என்பன 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ், ஏற்பிசைவு செய்யப்பட்ட புலமைச் சொத்தின் வகைகளாகும் என்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். வினாவில் ''விபரிக்குமாறு'' கேட்கப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் வெறுமனே புலமைச் சொத்துக்களின் வகைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரியாக திருப்திகரமானது.**

## <u>பகுதி C</u>

## வினா இல. 07

இது ஒப்பந்தச் சட்டம் மற்றும் பொருட்கள் விற்பனைச் சட்டம் ஆகியவற்றுடன் தொடர்புடைய நியாயமானளவு இலகுவான வினாவாக இருந்ததுடன் இங்கு **அசேனுக்கு** உள்ள சட்ட உரிமை பற்றி ஆராயுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு நன்றாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் **அசேனுக்கு** உள்ள சட்ட உரிமைகள் பற்றி ஆராயாது தரப்பட்ட விவரணத்திலிருந்த பல்வேறு விடயங்கள் பற்றியும் மதிப்பிட்டிருந்தனர். பல பரீட்சார்த்திகள் **ஆட்டோமொபைல் லங்கா (பிரை.) லிமிட்.** ஒப்பந்தத்தை மீறியுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளவில்லை. ஏனெனில் **அசேன்** மற்றும் **ஆட்டோமொபைல் லங்கா (பிரை.) லிமிட்.** இற்கிடையிலான ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த விசேடமாகக் குறிப்பிடப்பட்டு ''வெளிப்படுத்தப்பட்ட விடயத்தை'' ஆட்டோ மொபைல் லங்கா (பிரை.) லிமிட்டெட் கடைப்பிடித்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## வினா இல. 08

இவ்வினா தொழில் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இங்கு தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில் **சுனிமல்** ஓர் ஊழியரா அல்லது சுயாதீன ஒப்பந்தகாரரா என்பதை ஆராயுமாறு கேட்கப்பட்டிருந்தது. குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்திலிருந்த மெய்மைகளைத் தொடர்புபடுத்தாது **சுனிமல்** ஓர் ஊழியர் அல்லது ஓர் சுயாதீன ஒப்பந்தகாரர் என மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர். நபர் ஒருவரின் ஊழியர் நிலைமையினைத் துணிவதற்கு உதவக்கூடிய சோதனைகளாக கட்டுப்பாட்டுச் சோதனை, உபகரணச் சோதனை, ஒன்றித்த சோதனை மற்றும் பொருளாதார உண்மைச் சோதனை ஆகிய நான்கு சோதனைகள் உள்ளன என்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். மெய்மைகளின் அடிப்படையில் ஒரு நியாயமான முடிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## வினா இல. 09

இது பங்குடமைச் சட்டத்துடன் தொடர்புபட்ட நியாயமானளவு இலகுவான வினாவாகும். இங்கு தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில் பகுதி (a) இல், பங்காளர் என்ற வகையில் கமலினால் மீறப்பட்ட கடமைகள் பற்றி ஆராயுமாறும் பகுதி (b) இல் 1890 ஆம் ஆண்டின் பங்குடமைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பங்காளர்களின் நான்கு உரிமைகள் மற்றும் கடமைகளைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் பகுதி (a) இற்கு நன்றாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கமல் ஒரு பங்காளர் என்ற வகையில் அவரால் மீறப்பட்ட கடமைகளை ஆராயாது பங்குடமைச் சட்டத்துடன் தரப்பட்ட விவரணத்திலிருந்த பல்வேறு விடயங்களையும் மதிப்பிட்டிருந்தனர். பங்குடமை சட்டத்திற்கிணங்க ஒரே நிலைமையில் வியாபாரங்களை முன்னெடுப்பதன் மூலம் பங்குடமையில் பங்குகொள்ளாத ஒவ்வொரு பங்காளருக்கும் ஒரு கடமை இருக்கிறது என்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். அவர் அவ்வாறு செய்திருந்தால், அத்தகைய வியாபாரங்களில் அவரால் ஈட்டப்பட்ட சகல இலாபங்களும் அந்தக் கம்பனிக்கே செலுத்தப்பட வேண்டும்.

பகுதி (b) இல், மிகவும் இலகுவானதும் நேரடியானதுமான வினாவே கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் 1890 ஆம் ஆண்டின் பங்குடமைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகளையும் கடமைகளையும் சரியாக எழுதியிருந்தனர். வினாவில் உரிமைகளையும் கடமைகளையும் ''குறிப்பிடுமாறு'' தெளிவாகக் கூறப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் அவை தொடர்பில் விபரமான விடைகளை வழங்கியிருந்தனர். பரீட்சார்த்திகள் விடையளிப்பதற்கு முன் வினாவில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமைந்திருந்தது.**

## <u>பகுதி D</u>

## வினா இல. 10

இவ்வினா 2 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இதன் பகுதி (a) ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

வினாவின் பகுதி (a) (i), ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில் தரப்பட்ட விவரணம் தொடர்பில், **குமார்** தனது தாத்தாவிடமிருந்து ஒரு BMW காரைப் பெறுவதற்கு உரித்தினைக் கொண்டுள்ளாரா என்பதை ஆராயுமாறு கேட்டிருந்தது. இப்பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒப்பந்தச் சட்டத்தைத் தொடர்புபடுத்தாது தரப்பட்ட விவரணத்தில் காணப்பட்ட விடயங்களையே விடையாக வழங்கியிருந்த பரீட்சார்த்திகளையும் காணக்கூடியதாக இருந்தது. அந்தப் பரீட்சார்த்திகள் **குமார்** தனது தாத்தாவிடமிருந்து ஒரு BMW காரைப் பெறுவதற்கு உரித்துடையவரா, இல்லையா என்பது பற்றிய ஓர் முடிவினை எட்டியிருக்கவில்லை.

வினாவின் பகுதி (a) (ii), ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பராயமடையாதவர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் தரப்பட்ட விவரணம் தொடர்பில், **ரவி** தனது முதல் ஆண்டுக்கான சம்பளத்தை அந்தப் பெண்மணிக்குச் செலுத்த வேண்டுமா என்பது பற்றி ஆராயுமாறு கேட்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில், பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடயங்களை வழங்கியிருந்தனர். இன்னும் சில சந்தர்ப்பங்களில் வினாவில் தரப்பட்ட விடயங்களையே விடையாகத் தந்திருந்தனர்.

**மொத்தத்தில் வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமாகக் காணப்பட்டது.**

இவ்வினாவின் பகுதி (b) ஆனது முகவராண்மைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. வினாவின் பகுதி (b) (i), ஆனது தரப்பட்ட விவரணத்தில் கூறப்பட்ட விடயங்களின் அடிப்படையில் **பாலா சிறியின்** முகவர் என்ற ரீதியில் **சிறிக்கு** கடமைப்பட்டுள்ள ஏதாவது கடமைகளை **பாலா** மீறியுள்ளாரா என்பதை ஆராயுமாறு கேட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் ஒப்பந்தச் சட்டத்துடன் விவரணத்தைக் குழப்பியடித்து, சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். முகவராண்மைச் சட்டத்தின் கீழ், முதல்வர் ஒருவரால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதும் அவரால் வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறாதிருப்பதும் முகவர் ஒருவரின் கடமை என்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். மேலும், முகவர் ஒருவராக அவர் இரகசிய இலாபத்தை ஈட்டக்கூடாது.

**மொத்தத்தில் வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.**

வினாவின் பகுதி (b) (ii) ஆனது, தனது பணத்தினைத் திரும்பப் பெறுவதற்கு **பெரேராவுக்கு** உள்ள சட்ட உரிமைகள் பற்றி ஆராயுமாறு கேட்டிருந்தது. குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் **பெரேரா** தனது பணத்தை மீளப்பெறுவதற்கான சட்ட உரிமைகள் பற்றி ஆராயாது விவரணத்தில் குறிப்பிடப்பட்டிருந்த மெய்மைகளை எழுதியிருந்தனர். முகவராண்மைச் சட்டத்தின்படி, முகவர் ஒருவர் முதல்வரால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் வேண்டும் என்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.**

\- - -

## <u>பரீட்சார்த்திகளின் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற்கொள்வதற்கான பொதுவான விடயங்கள்</u>:

1. பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.
2. வினாவினைப் பல தடவைகள் வாசித்த பின் குறிப்பிட்ட மற்றும் நேரடியான விடைகள் எதிர்பார்க்கப்படுமிடத்து தேவையற்ற விபரிப்புகளை / விபரங்களை எழுத வேண்டாம்.
3. வினைச் சொல் நிரல் ஒன்று வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச்சொல்லினைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
4. சுய கற்றல் பாடநூல், புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.
5. விடையெழுதும்போது சரியாக அடையாளம் கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.
6. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடத்தில் சரியாகவும் ஏற்றவாறும் இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
7. வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.
8. கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.
9. முறையான நேர முகாமை.
10. விடைப்பத்திரங்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்கள் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சிக்கவும்.
11. முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -